ராணி காமிக்ஸ்
தீரர் தில்லான் தோன்றும்
குணா கரூர்
முரட்டுக் குதிரை
ரூ.3

ராணி
முத்து
ஜனவரி 2000
மார்கழி
1
SAT
17
சனி
2000
RP

ராணி காமிக்ஸ் – 373 ஜனவரி 1 – 15
(மாதம் இருமுறை இதழ்) 2000

தீரர் தில்லான் தோன்றும்

ரட்டுக் குதிரை

அமெரிக்காவின் அரிசேனா மாநிலத்தில் உள்ள பள்ளத்தாக்கு, மலைப்
கெளில் நிறைய காட்டுக் குதிரைகள் கூட்டம் கூட்டமாக அலைந்து
ன்றன. அவற்றில் ஒரு கறுப்பு குதிரை மிகவும் பயங்கரமானது.
டுத்தனமானது. குதிரை வேட்டைக்காரர்கள் பலர் அந்தக் கறுப்புக்
ரையை பிடிக்க முயன்று மண்ணைக் கவ்வியதுதான் மிச்சம். யாருக்கும் அது
ங்காமல் முரண்டு பண்ணிக்கொண்டிருந்தது. ஒரு நாள்– ஒரு குதிரை வீரன்
த்தாக்கு வழியாக குதிரையில் வந்துகொண்டு இருந்தான். அப்போது–
கதைக்கு வாருங்கள்.

குதிரை வீரன் ஒரு வேலையாக பக்கத்து நகருக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்தான்.

அந்த நேரம் கறுப்புக்குதிரை அவன் கண்ணில் பட்டது. கறுப்புக்குதிரை அங்குமிங்குமாக துள்ளி ஓடிக் கொண்டிருந்தது.

அதோ கறுப்புக்குதிரை! எத்தனைமுறை நம்மிடம் விளையாட்டுக் காட்டிவிட்டது! இந்தமுறை அதனைப் பிடிக்க முயன்று பார்க்கலாம்!

குதிரை வீரன் கையில் கயிற்றை எடுத்துக்கொண்டு குதிரையை நெருங்கினான்.
மெதுவாக அதன் அருகே சென்று சுருக்குக் கயிற்றை அதன் கழுத்தில் மாட்டி இழுத்துவிட வேண்டியதுதான்!


அவன் அருகே சென்றதும்தான் தாமதம், கறுப்புக்குதிரை நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்தோடியது.
குதிரை வீரனும் சளைக்காமல் கறுப்புக்குதிரையை விரட்டிச் சென்றான்.

குதிரை அருகே சென்றதும் சுருக்குக் கயிற்றை அதன் கழுத்தில் போட்டான்.

சுருக்குக் கயிற்றில் சிக்கிக்கொண்ட கறுப்புக்குதிரை தன் இஷ்டத்துக்குக் குதிரை வீரனை இழுத்தது.
அடுத்த நொடி— கறுப்புக்குதிரை தன் பலம் முழுவதையும் திரட்டி சுண்டி இழுத்தது.
அவ்வளவுதான் குதிரையில் இருந்த குதிரை வீரன் தூக்கி எறியப்பட்டான்.


குதிரை வீரன் நிலை தடுமாறி விழுந்ததும் அவனுடைய குதிரையும் அந்தக் கறுப்புக் குதிரையுடன் சேர்ந்து காட்டுக்குள் ஓடியது
ஏய்... நீ எங்கே போகிறாய்? திரும்பி வந்துவிடு!

அப்போது அவ்வழியாக வண்டி ஒன்று வந்தது.

ஏய் சலைம் அங்கே பார்! யாரோ ஒருவன் பாதையில் நிற்கிறான்!
அட டன்கன் போலத் தெரிகிறதே! மீண்டும் அந்த கறுப்புக்குதிரையை பிடிக்க வந்துவிட்டான் போலிருக்கிறது!

அலோ
சலைம் !
ஏய் டன்கன் ! இங்கே என்ன செய்கிறாய்?
கறுப்புக்குதிரையை வேட்டையாட
வந்திருக்கிறாயா ?

ஆமாம் ! என்
சுருக்குகயிறு சரியாக அதன்
மீது விழுந்துவிட்டது.
கயிற்றை இழுப்பதற்குள்
அது என்னை தூக்கிப்
போட்டுவிட்டது ! என்
குதிரையும் அதனுடன்
சென்றுவிட்டது !


ஓ.கே. வண்டியில் ஏறு
உன்னை நகருக்குள் விட்டு
விடுகிறோம் !
ரொம்ப நன்றி !

டன்கன் வண்டியில் ஏறினான். உள்ளே மார்வல் தில்லான், செண்டர் என்று மூன்று பேர் இருந்தார்கள்.
தொந்தரவுக்கு மன்னிக்க வேண்டும்!
பரவாயில்லை! வந்து உட்காருங்கள்!
காட்டுக்குதிரையை பிடிக்கப் போய் உங்கள் குதிரையை கோட்டைவிட்டதை நாங்களும் கேட்டோம்!
ஆமாம்! இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் அதை பிடித்தே தீருவேன்!
அதே நேரம்— சுருக்குக்கயிற்றுடன் தப்பி ஓடிய காட்டுக்குதிரையின் கயிறு மரத்தில் சிக்கிக்கொண்டது. குதிரையினால் மேற்கொண்டு நகரமுடியவில்லை.
குதிரை கத்திப் பார்த்தது. துள்ளிப் பார்த்தது. குதித்துப் பார்த்தது. அதனால் விடுபட முடியவில்லை.

அப்போது இருவர் அந்த வழியாக குதிரையில் வந்தார்கள்.
ஜேக்! அங்கே பார் கறுப்புக்குதிரை மரத்தில் வசமாக சிக்கிக் கொண்டிருக்கிறது. வா அதனை மடக்கிப் பிடிப்போம்!
ஆனால் கறுப்புக்குதிரை மனிதர்களை அருகில் பார்த்ததும் இன்னும் அதிகமாக முரண்டு பிடித்தது.
அதே நேரம் வண்டியில்—
இங்கிருந்து 20 மைலுக்கு அப்பால் உள்ள பண்ணையில் நான் வேலை செய்கிறேன். ஓய்வு நேரத்தில் கறுப்புக்குதிரையை பிடிக்க வருவதுண்டு!

நானும் தில்லானும் பக்கத்து நகருக்குச் சென்று வருகிறோம்! உங்களுக்கு இன்று யோகமில்லை என்று நினைக்கிறேன்!
அதே நேரம்— சில மைல்களுக்கு அப்பால்— ஜேக்கும் அவன் சகோதரனும் குதிரையை மடக்குவதில் தீவிரமாக இருந்தார்கள்.
உன் சுருக்குகயிற்றை குதிரையின் கழுத்தில் வீசு!
குதிரை ஜேக் வீசிய சுருக்குக்கயிற்றில் சிக்கிக்கொண்டது.
இந்தக் குதிரையை நம்முடைய இடத்துக்கு இழுத்துச் சென்றுவிடலாம்!

இருவரும் ஆளுக்கொரு பக்கமாக குதிரையை இழுத்து வந்தார்கள். அது பயங்கரத் துள்ளலுடன்தான் அவர்களுடன் வந்தது.
முரட்டுக்குதிரையை தங்கள் இடத்துக்கு கொண்டுவந்து வேலியில் அடைத்தார்கள்.
சுதந்திரமாக காட்டில் சுற்றித்திரிந்த குதிரையை நாலு பக்க வேலிக்குள் அடைத்தால் எப்படி நிற்கும். அங்குமிங்குமாகத் தாவிக் குதித்தது.
ஜேக்கும் பர்ட்டும் முரட்டுக்குதிரையை அடக்க எவ்வளவோ முயன்று பார்த்தார்கள்.
பர்ட்! இதன் கால்களை கட்டிப் போட்டால்தான் அடங்கும்!
ஜேக்! நீ சொல்வதும் சரிதான்!

இருவரும் ஒருவழியாக முரட்டுக்குதிரையை கீழே சாய்த்து அதன் கால்களை கட்டிப் போட்டார்கள்.
பிறகு ஜேக் அதன்மேல் ஏறி பழக்க முயன்றான். ஆனால் முரட்டுக்குதிரை ராக்கெட் வேகத்தில் எம்பிக் குதித்தது. கட்டப்பட்டிருந்த அதன் கால்கள் விடுவிக்கப் பட்டன.
மேலே இருந்து ஜேக் நிலைகொள்ளாமல் தவித்தான்.
குதிரை பேய்த்தனமாக துள்ளியது.
குதிரை அவனை மேலே இருந்து கீழே விழச் செய்வதிலேயே குறியாய் இருந்தது.
அய்யோ...! அம்மா...!
முடிவில் குதிரையின் துள்ளலை சமாளிக்க முடியாமல் திணறிய ஜேக் தூக்கியெறியப்பட்டான்.

டன்கன் பண்ணைக்கு வந்து சேர்ந்தான்.
என்ன டன்கன்! அந்த கறுப்பு பிசாசை பிடித்துவிட்டாயா?
ஐந்து நாளுக்கு முன்பு அதை பிடிக்கப்போய் என் குதிரையும் பறிபோய்விட்டது. நாளை மீண்டும் கறுப்புக் குதிரையை தேடிச் செல்லப்போகிறேன்!
டன்கன்! பழைய குடிலுக்கு அருகே இருவர் வேலி அமைத்து நிறைய குதிரைகளை அடைத்து வைத்திருக்கிறார்கள். அதில் உன் கறுப்புக் குதிரையும் இருந்ததைப் பார்த்தேன்!
உண்மையாகவா?
உடனே நான் போய் பார்த்து வருகிறேன்!


உடனே டன்கன் கறுப்புக் குதிரையைத் தேடிச் சென்றான். அங்கே கறுப்புக் குதிரை மட்டும் தனியாக அடைத்து வைக்கப்பட்டு இருந்தது.
இதோ... என் குதிரையை அடைத்து வைத்திருக் கிறார்கள்!
இதை எப்படி பிடித்தார்கள்!
யார் அவன்? கறுப்புக்குதிரையை பார்க்கிறான்!


என்ன மிஸ்டர்...
என்ன பார்க்கிறாய்?
எனக்குச் சொந்தமானது இங்கே இருப்பதைப் பார்க்கிறேன்!
சொந்தமானதா?
ஆமாம்! இதோ சில நாளுக்கு முன் இந்த கறுப்புக் குதிரையை சுருக்குப் போட்டு பிடித்தேன்.
இதோ இதுகூட என் சேணம்தான்! எங்கே எடுத்தீர்கள்?

என் சேணத்தைப் பற்றி எனக்குத் தெரியாதா? மரியாதையாக கொடுத்துவிடுங்கள்!
ஏய்... சேணத்தை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் உன் உடம்பில் உயிர் இருக்காது.
ஓ.கே.! அப்படியானால் நாளை நகர செரீப்புடன் வருகிறேன்!
ஏய்... இவனை விடக்கூடாது! விட்டால் நாம் தூக்கில் தொங்குவது உறுதியாகிவிடும்!

டன்கன் குதிரையில் ஏறி புறப்பட்டான். போகும்போது அங்கு குதிரைகளை மொத்தமாக வேலியில் அடைத்து வைத்திருப்பதைப் பார்த்தான்.
டன்கன் அப்படியே வேலிக்கு அருகே வந்து நோட்டமிட்டான்.
அனைத்தும் நல்ல கலப்பினக் குதிரைகள். ஒவ்வொன்றிலும் ஒரு குறி இருக்கிறதே?
நம் குதிரைகளை பார்த்துவிட்டான். இனி அவனுக்கு நம் மீது சந்தேகம் வந்துவிடும்!
அவன் கதையை முடிக்க வேண்டும். ஆனால் இங்கு வேண்டாம். குன்றுகளுக்கு இடையே வைத்து முடித்துவிடுவோம்!

மார்ஷல் தில்லான் தன் வேலையை முடித்துவிட்டு வண்டியில் டோஜ் நகருக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.


யாரோ ஒருவன் நம்மை நோக்கி குதிரையில் வருகிறானே?
துப்பாக்கி சத்தம் வேறு கேட்கிறதே! வேகமாக குதிரையை விரட்டு!


வண்டி நாலு கால் பாய்ச்சலில் பாய்ந்தோடியது.


தில்லான் வண்டியில் இருந்து இறங்கிப் பார்த்தார்.
அய்யோ...! காயம் அதிகமாக இருக்கிறது. உடனே இவனை வண்டியில் ஏற்றி நகருக்கு கொண்டு போ! நான் விரைவில் வருகிறேன்!
ஓ.கே. தில்லான்!

வா வேகமாகப் போகலாம்! அவன் செத்ததாகத் தெரியவில்லை! நம்மைப் பற்றி எதுவும் சொல்லிவிடுவான்!

நம்முடைய குதிரைகளை எல்லாம் ? நகருக்கு கொண்டு சென்று விற்றுவிடுவோம்! அங்கே செல்ல எப்படியும் இரண்டு நாள் ஆகுமே!
ஜேக்! கறுப்புக் குதிரையை என்ன செய்வது? அதை சமாளிக்கத்தான் சிரமம்!

அதை கொண்டுபோய்விட்டால் எப்படியும் இலட்ச ரூபாய்க்கு விற்றுவிடலாம்! அதை நான் ஓட்டி வருகிறேன்!
நல்ல யோசனை ஜேக்!


தில்லான் குற்றவாளிகளைத் தேடி விரைந்து வந்தார்.
கண்ணுக்கு எட்டிய தூரம் வரை யாருமில்லை! எனவே அருகில் உள்ள செரீப்புக்கு தகவல் சொல்ல வேண்டும்!

தில்லான் வந்த வழியே திரும்பி டோஜ் நகரை நோக்கி சென்றார்.

ஜேக்கும் பார்ட்டும் தங்கள் குதிரைகளை ஒன்றாக கட்டி இரண்டு நாள் பயணமாக டோஜ் நகரை நோக்கி சென்றார்கள்.

ஜேக் கறுப்புக் குதிரையை இழுத்து வந்தான்.

அப்பா ! நமக்குச் சொந்தமான இடம் நமக்கு எப்பொழுது கிடைக்கும் அப்பா ? சுதந்திரம் கொடுப்பார்களா ?
சுதந்திரமா ? நாம் அதற்கெல்லாம் ஆசைப்படக் கூடாது மகனே !
செவ்விந்தியர்கள் இருவர் பேசிக்கொண்டார்கள்.



ஜேக் பார்ட்டை எச்சரிப்பதற்குள் செவ்விந்தியர்களின் அம்பு ஒன்று பார்ட்டின் மார்பில் பாய்ந்தது.

பர்ட்...!
உடனே ஜேக் துப்பாக்
கியை உருவினான்.


ஜேக் மற்ற குதிரைகளை விட்டு
விட்டு கறுப்புக் குதிரையை
மட்டும் இழுத்துக்கொண்டு
துப்பாக்கியால்
செவ்விந்தியர்
களை சுட்டுக்
கொண்டே
சென்றான்.

அப்பா!
அவனை விடுங்கள்!
நாம் மற்ற குதிரைகளை
மடக்கிப் பிடிப்போம்!

இரண்டு நாளுக்குப் பிறகு—
தில்லான்! ரொம்ப நாளைக்குப் பிறகு ஒருவன் குதிரையுடன் நம் நகருக்கு வருகிறான்!
நல்ல முரட்டுக் குதிரைதான்!
இதை எங்கே பிடித்தீர்கள்?
அருகே வராதீர்கள்! மனிதனைக் கண்டால் இதற்கு ஆகாது!
எங்கே இருந்து வருகிறீர்கள்?
நான் தெற்கு டாக்கோடாவில் இருந்து வருகிறேன்! இங்கே ரூஸ்வெல்ட் என்பவருக்கு இந்தக் குதிரையை விற்க வந்தேன்!

ரூஸ்வெல்ட்! ஆமாம் அவருக்கு குதிரைகள் என்றால் போதும். இப்போது அவர் மதுபானக் கடையில் இருப்பார்!
ரொம்ப நன்றி மார்ஷல்!
இவனை கண்காணிக்க வேண்டும்!
செஸ்டர்! சிடர்கிரிக் நகர ஷெரிப்பிடமிருந்து ஒரு செய்தி வேண்டும்!
ஓ.கே. உங்களுடைய திட்டம் என்ன தில்லான்!
இவனைப் பற்றிய முழுமையான தகவல் வேண்டும்!

சிடார்கிரிக்கில்–
டியர் மார்ஷல்! டோஜ் நகர மார்ஷல் தில்லானுக்கு சில விபரங்கள் வேண்டும்...!
டோஜ் நகரில்–
அப்படியானால் குதிரையுடன் வந்தவன் மீது சந்தேகம் இருக்கிறதா?
எனக்கு இரண்டுகாரணத்துக்கு விபரம் புரியவேண்டும்!
குதிரையின் கழுத்தில் உள்ள கயிறு எரிந்திருக்கிறது! ஆனால் டன்கன்தான் கறுப்புக்குதிரையின் கழுத்தில் சுருக்குக்கயிற்றை வீசியதாக சொன்னான்!
ஆமாம் தில்லான்! இன்னொன்று என்ன!

குதிரையின் மீது வெள்ளை மண் படிந்திருக்கிறது! வெள்ளை மண் வடக்கு பள்ளத்தாக்கில்தான் உண்டு. இவன் தெற்கு பக்கம் இருந்து வருவதாக கூறினான்! அதான் குழப்பம்!
ஜேக் ரூஸ்வெல்ட்டை சந்தித்தான்.
ரூஸ்வெல்ட்! இதன் மீது சவாரி செய்தாலே கம்பீரமாக இருக்கும்! உங்களுக்காகவே கொண்டுவந்தேன்!
மெக்சிகோவில் இருந்து வரவழைக்கப்பட்டது!
ஓ.கே. ஜேக்! ஐம்பதாயிரம் வாங்கிக்கொள்! குதிரை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!

ஜேக் மகிழ்ச்சியில் மதுபாட்டிலுடன் நகரில் அலைந்தான். அப்போது—
வருவது டன்கன் போல தெரிகிறதே! பிரச்சினை செய்தால் சுட்டுத்தள்ள வேண்டியதுதான்!


டன்கன் தில்லானை சந்தித்தான்.
தில்லான்! என் செய்தி உங்களுக்கு கிடைத்திருக்கும்! நான் நன்கு தேறிவிட்டேன்!
டன்கன் உன்னை மீண்டும் சந்தித்ததில் மகிழ்ச்சி! ஜேக் இங்கேதான் நரிபோல திரிந்துகொண்டிருக் கிறான்!

அவன் குதிரை திருடன் என்பதற்கு ஆதாரமாக என்னுடைய சேனம் அவனிடம் இருக்கிறது. சிடர்கீரிக் நகர செரீப் அவனை தேடிக்கொண்டிருக்கிறார்!

எப்படி இருந்தாலும் அந்த கறுப்புக்குதிரையை நான் அடையாமல் விட மாட்டேன்!


அந்தக் குதிரையை ஜேக் ரூஸ்வெல்டுக்கு விற்க கொண்டு வந்திருக்கிறான்! வா அவனிடம் பேசி பார்ப்போம்!

தில்லான், டன்கன் இருவரும் ஜேக்கை சந்தித்தார்கள்.
தில்லான்! நானும் என் சகோதரனும் டாக்கோடா நகரில் இருந்து குதிரைகளுடன் வரும்போது செவ்விந்தியர்கள் என் சகோதரனை கொன்றுவிட்டு குதிரையுடன் தப்பிவிட்டார்கள். நான் இந்தக் குதிரையுடன் தப்பிவந்துவிட்டேன்!

அப்படியானால் என் சேனம் உங்கள் இடத்துக்கு எப்படி வந்தது?
இந்த கறுப்புக்குதிரை பற்றியும் சீடர்கீரிக் நகர செரீப் விசாரித்துக்கொண்டிருக்கிறார்!
தில்லானும் டன்கனும் வெளியே வந்தார்கள்.
கறுப்புக்குதிரையை நான்தான் முதலில் பிடித்தேன் என்பதற்கு அதன் கழுத்தில் உள்ள என் கயிறே ஆதாரம்!
ஓ.கே.! சீடர்கீரிக் செரீப்பிடம் இருந்து தகவல் வரட்டும். அதற்குள் ரூஸ்வெல்டிடம் பேசுவோம்!
ரூஸ்வெல்ட் பண்ணையில்– ஜேக் இருந்தான்.
ஏய்... நீ குதிரை திருடன். இத்தனை நாளும் திருட்டுக் குதிரைகளைதான் என்னிடம் விற்றிருக்கிறாய். உன்னைப்பற்றி தில்லான் எல்லாம் சொல்லிவிட்டார்!

மரியாதையாக நான் கொடுத்த பணத்தை திருப்பிக் கொடுத்து விட்டு நாளையே ஓடிவிடு!
ரூஸ்வெல்ட்! வியாபாரம் முடிந்தபிறகு பணத்தை திரும்பக் கேட்பது முறையல்ல!
ரூஸ்வெல்ட்! நான் இங்கு தூக்குக்கயிற்றில் தொங்க வரவில்லை. இன்று தங்கி நாளை அதிகாலை நான் புறப்பட்டுவிடுவேன்!
போவதற்கு முன் பணத்தை கொடுத்துவிட்டு உன் குதிரையையும் எடுத்துக்கொண்டு போ!
வழக்கமாக என்னிடம் குதிரை வாங்குவது நீதான் என்று தில்லானுக்கே தெரியும்!

ரூஸ்வெல்ட! நான் குற்றவாளி என்றால் நீயும் குற்றவாளிதான்! மறந்து விடாதே!
முட்டாள்! முதலில் நீ என் பணத்தை திருப்பிக்கொடு! இல்லை...!
இருவருக்கும் மோதல் ஏற்பட்டது.
ரூஸ்வெல்ட்! மரியாதையாக துப்பாக்கியை கீழே போடு!
ஜேக் ரூஸ்வெல்ட்டை தள்ளிவிட்டதில் மேசை மீது இருந்த விளக்கு கீழே சரிந்தது.
ரூஸ்வெல்ட் படாரென்று கீழே சரியவும், அந்த அறை தீப்பிடிக்கவும் சரியாக இருந்தது.
நல்லது! உன் முடிவை நீயே தேடிக்கொண்டாய்!

ரூஸ்வெல்டின் வீடு தீப்பிடித்து கொளுந்துவிட்டு எரிந்தது.
நகரமே விழித்துக்கொண்டு பரபரப்பானது.


தில்லான் அலுவலகத்தில்–
டன்கன்! வெளியே என்ன கூச்சல்? வா பார்க்கலாம்!

இருவரும் வெளியே வந்து பார்த்தார்கள்.
தில்லான் அங்கே பாருங்கள்! தீ எரிகிறது!
டன்கன்! நான் தீயணைப்பு வண்டிக்கு ஏற்பாடு செய்கிறேன்!

இது ஜேக்குடைய
வேலையாகத்தான்
இருக்கும். நான்
அவனை மடக்குகிறேன்!
உடனே டன்கன் ஜேக்கை
விரட்டி வந்தான்.

யாரோ என்னை
பின்தொடர்கிறார்கள்?
ஏய்... ஜேக்! தில்லானுக்கு
நீ அவசியம் தேவை!


ஜேக் துப்பாக்கியை எடுத்தான்.
வா டன்கன்!
உனக்காகத்தான்
என் துப்பாக்கி
காத்திருக்கிறது. போனமுறை
உன் கதையை முடித்திருக்க
வேண்டும். பிழைத்துவிட்டாய்!

இருவரும் பதுங்கி பதுங்கி குதிரைகளை அடைத்து வைத்திருக்கும் பட்டிக்கு வந்தார்கள்.
டுமீல்....
ஜேக்... டன்களை நோக்கிச் சுட்டான்
ஜேக் விடாமல் சுட்டான். துப்பாக்கி சத்தம் கேட்டு குதிரை கள் மிரண்டன.
அப்போது கறுப்புக் குதிரை ஜேக்கை கண்டதும் அவன் நெஞ்சில் படார் படாரென்று மிதித்தது.
ஹி...
ஹி.ஹி.ஹி
அவன் வலி தாங்கமுடியாமல் புரண்டாலும், குதிரை அவனை விட வில்லை. வெறிபிடித்தது போல எகிறிக் குதித்து மிதித்துத் தள்ளியது.
ஹி... ஹி... ஹி... ஹி...


அதற்குள் டன்கன் குதிரையை விரட்டியபடியே ஓடிவந்தான்.
ஏய்... விடு அவனை! தூரப் போ...!


டன்கன் குரல் கொடுத்தபிறகுதான் கறுப்புக் குதிரை தன் கோபத்தை குறைத்து விலகிச் சென்றது.
சே...! என்ன முரட்டுக் குதிரை இது! பாவம் ஜேக்! குதிரை யாலே தன் சாவை தேடிக் கொண்டான்!


அதற்குள் தில்லான் ஓடிவந்தார்.
என்ன டன்கன்! என்ன ஆச்சு?
தில்லான்! கறுப்புக் குதிரை ஜேக்கை புரட்டி எடுத்துவிட்டது!

ரூஸ்வெல்ட்டை டாக்டரிடம் சேர்த்திருக்கிறேன். போனால்தான் அவருடைய நிலை புரியும்?
ஓ.கே. தில்லான்! எல்லாம் முடிந்துவிட்டது!
தில்லான் டாக்டரிடம் வந்தார்.
தில்லான் ரூஸ்வெல்ட்டை காப்பாற்ற முடியவில்லை! உடம்பு தீயில் எரிந்துவிட்டது!
ஓ.கே. டன்கன்! நீ அந்த கறுப்புக் குதிரையை எடுத்துக்கொள்! ரூஸ்வெல்டின் மற்ற குதிரைகளை என்ன செய்வதென்று பார்ப்போம்!

அப்போது—
மிஸ்டர் தில்லான் அங்கே பாருங்கள். யாரோ குதிரையுடன் வருகிறார்கள்!
ஆமாம்! செஸ்டர்! எங்கிருந்து இந்தக் குதிரைகளை கொண்டுவருகிறார்?


ஒரு பெரியவர் பத்து பதினைந்து குதிரைகளுடன் வந்துகொண்டிருந்தார்.

அலோ தில்லான்! இந்தக் குதிரைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உங்களால் உதவ முடியுமா?

பள்ளத்தாக்கில் இரண்டு செவ்விந்தியர்கள் யாரிடமோ இந்த குதிரைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றுகொண்டிருந்தார்கள். நான் அவர்களிடமிருந்து இவைகளை காப்பாற்றி கொண்டு வருகிறேன்!
இந்த நகரத்தில் உள்ளவர்களுடைய குதிரைகளாகத்தான் இருக்கும் என்று இங்கு வந்தேன்!
இதோ இவனிடம் இந்தக் குதிரைகளை ஒப்படைத்துவிடுங்கள்!
எப்படியோ குதிரை சொந்தக்காரர்களிடம் போய் சேர்ந்தால் சரிதான்!

டன்கன்! உனக்கு தெரிந்தவர் களுடைய குதிரை இதில் இருந்தால் அவைகளை சேர்த்துவிடு!
ஓ.கே. தில்லான்! நானே ஒப்படைத்துவிடுகிறேன்!

குதிரை களுடன் வந்த பெரியவர் பட்டியில் அடைத்து வைத்திருந்த முரட்டுக் குதிரையை பார்த்தார்.
குதிரை என்றால் இதுதர்ன் குதிரை! என்ன அழகு!


சவாரி செய்தால் இப்படிப்பட்ட குதிரையில்தான் சவாரி செய்ய வேண்டும்!

அவர் ஆசையுடன் பட்டியை திறந்தார்.
வேண்டாம்! அருகே போகாதீர்கள்! அது உதைத்து தள்ளிவிடும்!


எப்படிப்பட்ட முரட்டுக் குதிரையாக இருந்தாலும் என்னிடம் சாதுவாகி விடும்!
பார்த்தீர்களா? அருகே சென்றால் அது முரண்டு பிடிக்கும்!


ஹிஹிஹி...!
குதிரை பயங்கரமாக கனைத்தது.


அவர் கதவை திறந்து உள்ளே போனதுதான் தாமதம் குதிரை அவரை எட்டி உதைத்து தள்ளிவிட்டு வெளியே பாய்ந்தது.

முரட்டுக் குதிரையின் கனைப்பு ஒலியைக் கேட்டு மற்ற குதிரைகளும் மிரண்டன.

பட்டியை விட்டு வெளியே வந்த முரட்டுக் குதிரையை தொடர்ந்து மற்ற குதிரைகளும் வெளிவந்தன

எல்லாம் நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்தோடின.


பாவம் அந்தப் பெரியவர் குதிரைகளின் காலடியில் சிக்கி சின்னாபின்னமாகிக் கிடந்தார்.


குதிரைகள் நகரைவிட்டு வெளிவந்து பள்ளத்தாக்குக்கு வந்தன.


முரட்டுக் குதிரை சுதந்திரம்
கிடைத்ததை நினைத்து காடு
மேடு என ஓடி விளை
யாடியது.


மலைக் குன்றில் ஏறி விளிம்புக்கு
வந்து நின்றது.


அந்த விளிம்பில் இருந்தபடியே எதிரே இருந்த
அடுத்த குன்றுக்கு தைரியமாக தாவியது.

இப்படி பல குன்றுகளையெல்லாம் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து தாண்டியது
அது அப்படித் தாண்டத் தாண்ட அதன் கால்கள் பாறைகளில் அடிபட்டு இரத்தம் கசிந்தது.
அதேநேரம்—
எல்லா குதிரைகளுமே அருகில் உள்ள பண்ணைக்கு சொந்தமானது


பண்ணையாரை மிரட்டி இந்தக் குதிரைகளை வாங்கியிருக்கிறார்கள்!
ஆனால் அந்தக் குதிரைகளை உரியவர்களிடமும் ஒப்படைக்க முடியாது!

அவைகள் இனி காட்டுக் குதிரைகளாகிவிட்டன! அவைகளை மறந்துவிட வேண்டியதுதான்!

டன்கன் தில்லானிடம் விடை பெற்று டோஜ் நகரைவிட்டு புறப்பட்டு பள்ளத்தாக்கு வழியாக தன் நகருக்கு சென்று கொண்டிருந்தான்.

ஒரு இடத்தில் நின்றான்.
இங்கே ஏதோ முனகல் சத்தம் கேட்கிறதே!


டன்கன் அருகே சென்று பார்த்தான். அங்கே முரட்டுக் குதிரை படுத்திருந்தது.
அட... என் முரட்டுக் குதிரை! அதனால் எழுந்திருக்க முடிய வில்லையே ஏன்?


டன்கன் அருகில் வந்து பார்த்தார்.
அடப்பாவமே... பின்னங்கால் இரண்டும் உடைந்திருக்கிறதே!

சே!
குதிரை என்றால் உன்னைப் போல முரட்டுக் குதிரையாக இருக்க வேண்டும் என்று பெருமைப்பட்டேன்! இப்போது நீயே இப்படி துவண்டுபோய்விட்டாயே?
டன்கன் கையில் துப்பாக்கியை எடுத்தான்.
உன்னிடம் பிடித்ததே உன் முரட்டுக் குணம்தான்! நீ இப்படி அல்லல் படுவதைவிட சாவதேமேல்!
டன்கன் முரட்டுக் குதிரையை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு சோகத்துடன் நடந்தான்.



ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியா நெடுஞ்சாலை, சென்னை—600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகே ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சா 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

படக்கதை தொடர் 6

முகமூடி வீரர் மாயாவி

இங்கு எரிமலை இருக்கிறதா?
இருக்க வாய்ப்பு இருக்கிறது!
ஏய்... வண்டியை நிறுத்துங்கள்!
எரிமலையிலா இறங்கப் போகிறீர்கள்?
ஆமாம்!
வாரன்! கீழே உட்காரா விட்டால், சுட்டுத்தள்ளி விடுவேன்!
அதோ அதுதான் நரகமா?
ஜீப் மலை விளிம்புக்கு வந்து நின்றது.
தயவுசெய்து எங்களை விட்டுவிடுங்கள்!
©1998 by King Features Syndicate, Inc. World rights reserved

வண்டியின் பின்பக்கத்தை அப்படியே தூக்கிவிட்டார்கள். வண்டியில் இருந்த வர்கள் சரசரவென்று தலை குப்புற விழுந்தார்கள்
அய்யோ...
அம்மா !
அதோ நரகம் செல்லும் வண்டி !
JUNGLE PATROL
இன்னும் கொஞ்சம் கீழே பற !
நாம் நரகத்தை நெருங்கிவிட்டோம் !
ப் கைதிகளை நரகத்துக்குள் தள்ளிவிட்டுவிட்டு புறப்பட்டுச் சென்றது


சந்தேகம் இல்லை! இதில்தான் கைதிகளை ஏற்றி வந்திருக்க வேண்டும்! நான் வாம்பசியில் பார்த்திருக்கிறேன்!
©1998 by King Features Syndicate, Inc. World rights reserved
எப்படியாவது நரகத்தின் மர்மத்தை கண்டுபிடிக்க வேண்டும்!
மரங்கள் அருகே தரை இறக்கு!
என்ன வேலை முடிந்ததா?
www.kingfeatures.com
ஆமாம்! நாங்கள் விடைபெறுகிறோம்!
விரைவில் வந்து எங்களுக்கு ஓய்வு கொடுங்கள்!
நரகத்துக்கு அருகே சிலர் காவலுக்கு வைக்கப்பட்டிருந்தார்கள்.

நீ இங்கேயே இரு!
நாங்கள் பார்த்து வருகிறோம்!
இது என்ன இடம்?
இதுதான் நான் தேடிவந்த இடம்!
திடீரென்று அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்கள்.
டுமீல்...!
யாரோ! நம்மை கண்காணிக்கிறார்கள்!
சுடுகிறார்களே தவிர குறி வைக்கத் தெரியவில்லை!
இல்லை! நம்மை எச்சரிக்கிறார்கள்!
அவர்களிடம் காட்டு இலாகாவைச் சேர்ந்த நான் பேசுகிறேன்!
மாயாவி உடன் வந்தவர் கைகளை தூக்கியபடியே வந்தார்
???

உங்களுக்கு இங்கே என்ன வேலை?
ஒரு கைதியை மீட்க வேண்டும்!
குற்றவாளியை மீட்க ஏன் சிரமப்படுகிறீர்கள்?
அவன் நிரபராதி!
நிரபராதியா... நல்ல வேடிக்கை!
ஹா... ஹா... ஹா...!
Olesen & Williams
நீங்கள் காட்டு இலாகாவை சேர்ந்தவர்கள் என்பதால் சொல்கிறேன்!
நரகத்தில் தள்ளிப்படுபவர்கள் அனைவருமே குற்றவாளிகள்தான்!
நரகத்தில் நடப்பதை வெளியே சொல்ல யாரும் உயிருடன் திரும்பவில்லை!

கீழே காவலர்கள் இல்லையா?
காவலர்களா? யார் அங்கே செல்வது?
கீழே எப்படிப் போகவேண்டும்!
மலையில் சறுக்கிச் செல்லவேண்டியதுதான்!
உடனே மாயாவி மலையில் சறுக்கினார்.
விமானி! கொஞ்சம் காத்திரு!
இது உயிருக்கு ஆபத்தானது!
உள்ளே குதித்து விட்டானே!
இனி அவன் கதை முடிந்தது முடிந்ததுதான்!
மாயாவியுடன் டெவிலும் சறுக்கிக்கொண்டு வந்தது!
டெவில் பார்த்துவா! பாறை கூர்மையாக இருக்கிறது.

இது எங்கே போய் முடிகிறதோ தெரியவில்லையே?
டெவில் எதற்கும் தயாராக இரு! இது கொலைகாரர்களின் உலகம்!
மாயாவி கீழே வந்தார்.
இதுதான் நரகமா?
நரகம் என்றார்களே? இங்கே சொர்க்கம் போலத் தெரிகிறதே!
எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று இருக்கிறதே!
அமைதியாக வேலை செய்யும் பணியாட்கள்!
இது நரகமா...? சொர்க்கமா...?

நரகம் என்றால் என்னவோ என நினைத்தேன்! ஆனால் இங்கு பசுமையாக இருக்கிறதே!
திடீரென்று அமைதி குலைந்தது.
ஏய்... அவனை கொல்! விடாதே!
எனக்கு உணவு வேண்டும்!
விடாதே கொல்...
உணவுக்காக கைதிகள் போராடுகிறார்கள்!
இங்கு என்னதான் நடக்கிறது பார்ப்போம்!
அங்கே வாரன் உணவுக்காக போராடிக்கொண்டிருந்தான்!
விடாதே! அவனைப் பிடி!
(தொடரும்)

அடுத்த
காமிக்ஸ்

கரும்புலி தோன்றும்

கொள்ளையர் படை

காட்டுக்குள் புகுந்த கொள்ளையர்களை
கரும்புலி எப்படி விரட்டியடிக்கிறார்!

படித்து மகிழுங்கள்!

**ஜனவரி 16 "ராணி காமிக்ஸ்"
இதழில் வெளிவருகிறது!**

"ராணி காமிக்ஸ்", சென்னை—600 007.

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

Regd.with the Registrar of Newspaper for India under No. 42576/84 – ISSN 0971-8567

January 1, 2000.

RANI COMICS (TAMIL FORTNIGHTLY)

எது வேணும் உங்களுக்கு?

1 "காலையில் கண்விழித்து எழ.. தெய்வீக மணம் கமழும்"

வண்ண ஆன்மீக காலண்டர் — விலை ரூ.10/-



ஆன்மீக காலண்டரில் உங்களுக்கு அருளாசி வழங்க விநாயகர், வெங்கடாசலபதி, சுவாமி ஐயப்பன், முருகன், மாரியம்மன், லெட்சுமி ஆகியோர்....

- 2000 ஆண்டு ராசிபலன்
- வாக்கிய பஞ்சாங்கம்
- கவுரி பஞ்சாங்கம்
- திதிகள்
- வாஸ்துசாஸ்திர பலன்கள்
- கனவுப்பலன்கள்
- சகுனங்கள்
- பல்லிவிழும் பலன்
- கருட தரிசனம்
- முக்கிய விரத நாட்கள்
- நல்ல நேரம்
- ஓரை பார்க்கும் பலன்
- முக்கிய பண்டிகைகள்
- அரசு விடுமுறை நாட்கள்
- பூஜைக்குரிய பலன்கள்
- கோவில் திருவிழாக்கள்
- நியூமரலாஜி எண்கள்
- உங்கள் அதிர்ஷ்ட தினங்கள்

2 "சினிமா உலக கனவு நட்சத்திரங்கள் தோன்றும்"

வண்ண கலக்கல் காலண்டர் —விலை ரூ.21/-

கவர்ச்சி காலண்டரில் உங்கள் நெஞ்சம் நிறைந்த
தேவயானி, மீனா, ரோஜா, சிம்ரன்
ரம்யாகிருஷ்ணன், மும்தாஜ் ஆகியோர்...

புத்தாண்டு வாழ்த்துக்களுடன்
இதனை வழங்குகிறது

நம்பர் 1. மாலை நாளிதழ்